முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1574

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.01.2024, சனிக்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
தவபலம் கொண்ட தேசிகனே
பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
பேருலகமெல்லாம் ஞான கிளைகளும்
2. பிசகில்லாத தர்ம சாலைகளும்
ஆற்றல்பட உருவாக்கி உலகமெங்கும் அற்புதம்
நடத்தி வருகின்ற அரங்கனே
அகிலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
3. ஏற்புகொண்டு உற்ற துணையாய் நின்று இனிதே
உலக மாற்றத்துக்கும் இந்த பேருலகம் பாதுகாப்புக்கும்
அரங்கன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் 06 ம் நாள், 20.01.2024, சனிக்கிழமை)
ஆற்றல்பட தொடர்ந்து வழங்குவேன்
4. வழங்கவே அரங்கனுக்கு சக்தி கூட்டி
தொடர்ந்து துறையூர் மண்ணில் பேராற்றலாக
ஆறுமுகன் யான் இயங்கி வர
தடையின்றி அரங்கன் சபை நோக்கி
5. தரணியோர் தொடர்ந்து வந்தால்
இந்த உலகத்தில் அவரவர்க்கும் ஆறுமுகன் என் காட்சி உறுதியாகி
ஆற்றல்பட அவர்கள் விரும்புகின்ற வண்ணம்
மாற்றமும் அற்புதமும் இந்த பேருலகில் கண்டு
6. கண்டுமே அரங்கன் வந்த நோக்கமாக
கலியுகத்தில் அரங்கனோடு இணைகின்ற
தொண்டர் படைகள் அத்தனையும்
ஞானவான்களாக ஞானப்படைகளாக மாற்றம் கண்டு

7. ஞான யுகமாற்றம் இந்த உலகில் நிகழ்த்தி
ஞான தேசிகன் அவதார
நோக்கத்தை பூர்த்திசெய்ய நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–